மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# மரபு கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

## Feminist Thoughts in Traditional Poetry

தினகரி இலாசரஸ்/ Dinaggary Lazarus[1]
[1]Teacher, SK MARIAN CONVENT
Corresponding Email: dinaggary21@gmail.com

**ஆய்வுச்சாரம்**

கவிதை காலத்தால் முந்தியது. பல்வேறு இலக்கிய நூல்களாக இருபது நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தழைத்து விளங்கும் சிறப்புடையது. பாடுபொருளும் உத்திகளும் புதியனவாயினும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்படுதலின் இவை மரபு கவிதை. இம்மரபு கவிதைகளில் பெண்கள் அடிமைப்பட்டுப் படிப்பறிவு இல்லாமல் துன்பப்படுவதை இம்மரபு கவிதைகளின் வழி அறியலாம். அக்காலத்தில் உள்ள சமுதாய மூடநம்பிக்கைகள், குழந்தை திருமணம் ஆகியவை கவிதைகளில் புனையப்பட்டுள்ளது. பெண்களுக்குச் சம உரிமை இல்லை என்றால் இச்சமுதாயம் முன்னேற்றம் அடையாது. மரபு கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்:** மரபு கவிதைகள், பெண் கல்வி, பெண்ணியம் சிந்தனைகள்

**Abstract**

Traditional poetry predates the era. It has the distinction of surviving for more than twenty centuries as various literary texts. Although the lyrics and techniques are new, these are traditional poems composed according to traditional grammar. In these traditional poems, we can see that women are enslaved and suffering without education. The social superstitions of that time and child marriage are fabricated in the poems. If women do not have equal rights, society will not progress. The purpose of this article is to explore the feminist ideas in traditional poetry.

**Keywords:** Traditional poetry, women education, feminist ideas

## முன்னுரை

ஒரு பெண்ணின் நிலை அவள் சார்ந்துள்ள சமுதாயத்தின் நிலையைப் பிரதிபலிக்கும். ஒரு சமுதாய முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாய் இருப்பது பெண் இனம் தான். இன்றைய உலகில் பெருகிவரும் கருத்தோட்டங்களில் பெண்ணியமும் ஒன்று. பெண்களை அழுத்தி வைத்திருக்கும் சமூகக் கட்டுப்பாடுகளும் கருத்துப் போக்கும் மாறவேண்டும் என்னும் எண்ணத்தோடு பேசுவதும் எழுதுவதும் போராடுவதும் பெண்ணியக் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மூடநம்பிக்கைகள், சாதி வேறுபாடுகள், புதிய உலகம், தீண்டாமை, பொது உடமைச் சிந்தனை எனப் பல சமூகச் சிக்கல்களுக்குக் குரல் கொடுத்துள்ளது இம்மரபு கவிதை. மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன் பெண்களுக்காகவும் தன் பேனாவை இயக்கி இருக்கிறார்கள் என்பதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

## பெண்மையைப் போற்றுதல்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இந்தியாவின் விடிவெள்ளியாகத் தோன்றியவர். விடுதலை உணர்வையும், விழிப்புணர்வையும் மக்களிடையே பரவச் செய்த மகான். இன்றைய பெண்களின் சிந்தனைகளைப் பாரதியார் பல ஆண்டுகளுக்கு முன்பே தம் படைப்புகளில் அழுத்தமாகவும் ஆழமாகவும் கூறியுள்ளார். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், பெண் விடுதலை, பெண்கள் விடுதலைக் கும்மி, புதுமைப்பெண், பெண்மை என்னும் நான்கு கவிதைகளில் பெண்ணியம் தொடர்பான எத்தனையோ முற்போக்கான சிந்தனைகளை அவர் வெளியிட்டுள்ளார். பெண் என்பவள் 'பேசும் தெய்வம்' என்பதை வலியுறுத்து முகமாக அன்னை காளியை ஆயிரம் இடங்களில் சுட்டுகிறார். அதுமட்டுமல்லாமல் புதுமைப்பெண், பெண்மை விடுதலைக்கும்மி போன்ற பல்வேறு தலைப்புகளில் பெண்மையைப் போற்றியுள்ளார். பாரதி, மனைவியையும் தாயையும் மதிக்க வேண்டும் என்னும் கருத்தை,

> "மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமன்றால்
> மனையாளும் தெய்வமன்றோ மதிகெட்டீரே
> தாயைப் போல பிள்ளையென்று முன்னோர்
> வாக்கின் படி பெண்மை அடிமையுற்றால்
> மக்களெல்லாம் அடிமையுறல் வியப்பன்றோ"

என்று விளக்குகிறார். இதன் மூலம் ஒருவர் பண்பும், ஆத்மீகமும் மற்றவர்களால் உருவாகின்றன என்ற கருத்தை உணர்த்தியுள்ளார்.

## பெண் விடுதலை

பெண் விடுதலை பற்றிப்பேசும் போது அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களின் அவல நிலையை எண்ணி வருந்துகிறார். படிப்பறிவு இல்லாத நிலை திருமண வாழ்வின் அவலநிலை சமுதாய உரிமை ஆகியவற்றைப் பற்றியும் கூறியிருக்கிறார். கல்வி கற்க முடியாத நிலையையும் விருப்பமில்லாத் திருமண வாழ்வையும் நினைத்துக் குமுறும் முண்டாசு கவிஞர்,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்பதனையும், பெண் தன்னை விடப் படிப்பில் சிறந்தவளாக ஆளுமைமிக்க பெண்ணாக இருப்பதைக் கண்டு குமுறும் ஆண்களுக்காகவே எழுதப்பட்ட வரியாக அமைந்துள்ளது.

"மேலைநாடுகளில் பெண் ஒருவனால் மனைவியாகப் பார்க்கப்படுகிறாள்; கிழக்கில் அவள் எப்பொழுதும் தாயாகவே போற்றப்படுகிறாள். இந்தியாவில் பெண் என்பவள் நம் கண்களுக்குத் தரிசனம் தரும் தெய்வம். அவள் தன் முழு வாழ்க்கையையும் தாய்மைக்கே அர்ப்பணிக்கிறாள்" என்பார் சுவாமி விவேகானந்தர். ஆனால் இத்தகு பெருமைமிக்க பெண்ணியம் சமூகத்தில் படும் இன்னல்கள் மிகப்பலவாகும். மலையில் விளையும் சந்தனம் மார்பில் பூசி மகிழ்பவர்களுக்கே குளிர்ச்சியைக் கொடுக்கும்; கடலில் விளையும் முத்து அணிந்து மகிழ்பவர்களுக்கே அழகினைக் கொடுக்கும்; யாழிலிருந்து எழும் இசையானது கேட்டு மகிழ்பவர்களுக்கே இனிமையைத் தரும். அதுபோலவே பெண்ணும் பிறந்த வீட்டிற்குப் பயன்படமாட்டாள் என்றும், முத்தும் சந்தனமும் போன்று பெண்ணும் ஒரு நுகர்பொருள் என்கிற ஆதிக்கச் சிந்தனையின் ஆணிவேர் அறுபடாத காலத்திலேயே,

"பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை"
என்று ஆவேசமாயக் கேட்டும்,
"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே"

என்றும் அறுதியிட்டுக் கூறியவர் புரட்சிக் கவிஞரே. பெண்களை நமது சுயநலத்திற்காக அடக்க அடக்க நாம் அடிமைகளாகத்தான் போய்விடுவோம்; நாம் எழுச்சி பெற முடியாது. நல்ல குடும்பம் அமைந்து அதன்பின்னர் பிறக்கும் பிள்ளைகளும் பெருமையுடன் சிறந்துவிளங்க வேண்டுமானால் முதலில் பெண்ணடிமை தீர வேண்டும் என்கிறார்.

தொடர்ந்து, தமிழகத்தில் கணவனை இழந்த பெண்டிர் கைம்மை மகளிர் என அழைக்கப்பட்டனர். எப்பொழுதும் ஒரு பெண்ணின் கணவன் இறந்தபிறகு அந்த விதவை கூந்தலைக் களைந்துவிடவேண்டும். இது அவளை உருக்குலைப்பதற்காக மட்டுமன்று, வேறு ஆணுடன் மறுமணம் பற்றிச் சிந்திக்காமல் இருக்கவுமாகும். மேலும் ஆதிநாட்களில் விதவைகள் விழாக்களில் பங்கு கொள்ளக் கூடாது. பாரதிதாசன் கைம்பெண் விடுதலைப் போராட்டத்தை இரண்டு நிலையில் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். ஒன்று தமிழ்ச் சமுதாயத்தை நோக்கிய அறைகூவல், மற்றது கைம்பெண்களுக்கான அறைகூவல்.

ஒரு பெண் கணவனை இழந்து துன்புற்ற நிலையில் அவளது மனநிலையைக் குறித்து சமுதாயத்தில் யாரும் அக்கறை கொள்வதில்லை; கவலைப்படுவதுமில்லை. மாறாக அவளை 'அடிமைப் பெண்' என்ற கதிக்கு ஆளாக்கிவிடுகின்றனர். அதனைக் கவிஞர் இப்படிப் பாடுகின்றார்:

கூண்டிற் கிளி வளர்ப்பார் இல்லத்தில்
குக்கல் வளர்த்திடுவார்,
வேண்டியது தருவார்; அவற்றின்
விருப்பத்தை யறிந்தே!
மாண்டவன் மாண்டபின்னர் அவனின்
மனைவியின் உள்ளத்தை
ஆண்டையர் காண்பதில்லை ஐயகோ,
அடிமைப் பெண்கதியே!

(கைம்மைக் கொடுமை)

வீட்டில் வளர்க்கும் பறவைகளுக்கும் பிராணிகளுக்கும் அவற்றின் தேவையறிந்து வேண்டியதைத் தரும் மனிதன், மாந்த வர்க்க கைம்பெண் மனமறிந்து செயல்படாதது கொடுமையன்றோ. அவளை அடிமையாக்காதீர் என்று சமுதாயத்தை வேண்டி மனம் பதைக்கின்றார் கவிஞர். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதற்குத் தடையாக அமைவது சமுதாயத்தில் நிலவும் அறியாமையே காரணம் என்பது பாவேந்தரின் வாதம். சமுதாயத்தில் நிலவும் சாத்திரம், சம்பிரதாயம் போன்றவையே பெண்களின் அவல நிலைக்கான காரணம் என்பதை,

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைம்மையைத் தூக்கா தீர் ஒரு
கட்டழகன் திருந் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்கா தீர்!

(கைம்மைப் பழி)

என்று சமுதாயத்திற்கு அறிவு புகட்டுகிறார்.

**பெண்கல்வி**

பெண்கள் நாட்டின் கண்கள் என்பர். ஒரு நாடு வளமாகவும் செழிப்பாகவும் அமைதியாகவும் இருக்க அந்நாட்டின் சமுதாயம் வளர்ச்சி அடைந்த சமுதாயமாக மாற வேண்டும். பல குடும்பங்களின் முன்னேற்றமே ஒரு சமுதாயம் வளர்ச்சியடைந்த சமுதாயமாக உருவெடுக்க வித்திடுகிறது. ஒரு குடும்ப முன்னேற்றத்திற்கு அக்குடும்பத்தில் தாயாக, தமக்கையாக, மனைவியாக, மருமகளாகப் பல பரிணாமங்களில் பங்களிக்கும் பெண்ணே அடித்தளமாகிறாள். ஒரு நாட்டையே உருவாக்குகிற சக்தி பெண்களுக்கு இருந்தாலும், அச்சக்தியை அவர்களுக்கும் வழங்குவதற்குத் தேவை கல்வி. கல்வியின் அவசியத்தை அனைவரும் கேட்கும்படி,

'எளிமையினால் ஒரு தமிழன் கல்வி இல்லையென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிட வேண்டும்!'

(தமிழ் வளர்ச்சி, க:1, வ:6-7)

எனப் பாவேந்தர் பாடினார். அதோடு இல்லாமல், பெண் கல்வி முக்கியத்துவத்தை விளக்கக் குடும்ப விளக்கு என்ற நூலையும், இருண்ட வீடு என்ற நூலையையும் எழுதினார். குடும்ப விளக்கு பெண் கல்விச் சிறப்பையும் இருண்ட வீடு பெண் கல்வி அற்ற நிலையையும் புலப்படுத்துவனாய் அமைகின்றன.

வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல் மனையுறை
மகளிர்க்கு ஆடவர் உயிர்

(குறுந்தொகை, பாடல்:135, வ:1-2)

என்று பெண்களுக்கு அவர்களின் வீட்டையே உறைவிடமாக்கி, உலகமாக்கிய சமுதாயத்தின் கருத்துக்கு எதிராகப் புறப்பட்டவர் பாரதிதாசன்.

கல்வியில் லாத பெண்கள்
களர் நிலம்; அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை!

(குடும்ப விளக்கு பகுதி:2, க:223, வ:859-862)

கல்வி இல்லாப் பெண்களை நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும், அவற்றின் செயல் திறனும் குறைந்து காணப்படும் களர் நிலத்திற்கு உவமையாக்கிப் பாடியுள்ளார். தாயினது அறிவுரைக்கு ஈடே இல்லை. இங்கே ஒரு தாய் தன் மகளுக்குத் தலைவாரிப் பூச்சூடுவதோடு மட்டுமில்லாமல் கல்வியும் கற்க சொல்கிறாள். பாடசாலைக்குச் சென்று கல்வி கல், கல்வியை எங்கும் விலை கொடுத்து வாங்க முடியாது என்று அன்னையாகப் பாரதிதாசன் பாடியுள்ளார்.

**நிறைவுரை**

மரபு கவிதைகளில் காணப்படும் பெண்ணியச் சிந்தனையானது, தமிழினப் பெண்களின் மீதான ஒடுக்கு முறைகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றிலிருந்து அவர்கள் விடுதலை பெறும் வழிமுறைகளையும் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது. ஆண்களுக்கு நிகரான சமவுரிமையைக் கோருகிற மிதவாதப் பெண்ணியச் சிந்தனை (பஞ்சாங்கம், 2011) கவிஞரின் படைப்பில் காணப்படுகின்றது. சமுதாயத்தில் நடக்கும் பெண் கொடுமைகளைக் கடிந்து மக்களின் மனத்தில் புரட்சி உணர்ச்சியை மரபு கவிதையின் எழுப்பினர் கவிஞர்கள். ஆண் போல் பெண்ணும் குடும்பக் கடமைகளையும் ஆற்ற வேண்டும் என்ற சீர்திருத்தச் சிந்தனைக்குக் குரல் கொடுத்தவர் மகாகவி பாரதியும் பாவேந்தர் பாரதிதாசனும் ஆவர். பெண்ணியத்தை வெட்டிப் பேச்சாய் நினைக்காமல் நாட்டின் விடுதலையாய் நினைவுறுத்துகிறது இம்மரபு கவிதைகள். கவிஞர்கள் மறைந்த பின்பும் அவர்களின் படைப்புகள் பெண்ணியத்தைப் பேசிக் கொண்டுதான் இருக்கின்றன.

**துணைநூற்பட்டியல்**


கண்ணதாசன் (2001). *பாரதியார் கவிதைகள்*, பாரதி பதிப்பகம், சென்னை.
பஞ்சாங்கம்.க, (2000). *மகாகவி பாரதியாரின் பெண்ணியக் கட்டுரைகள்*, பாரதி அன்பர்கள், புதுச்சேரி.
பஞ்சாங்கம்.க, (2011). *இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்*, அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.
பாரதிதாசன் கவிதைகள், (1999). *நான்கு தொகுதிகள் (முழுவதும்).* கங்கை புத்தக நிலையம்.
ஜெயபாரதி.யு, (2007). *வாழ்வியல் அறங்கள்*, சிலம்பில் பெண்ணியம்' கலைஞன் பதிப்பகம், சென்னை.
மருதநாயகம், ப. *சங்க இலக்கிய ஆய்வு* தெ. பொ. மீயும் மேல அறிஞரும், ப. 108.